8. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) விதி 29–ஐத் தளர்த்தி பேரவைக் கூட்டத்தைக் காலை 9–00 மணிக்குத் தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 29-ஐத் தளர்த்தக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதி 287-ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி பேரவை விதி 29-ஐ நாளை (11-05-2012) வெள்ளிக்கிழமை தளர்த்தி பேரவைக் கூட்டம் காலை 9-00 மணிக்குத் தொடங்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

நாளை (11-05-2012) வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு பேரவை கூடும்.

(இ) விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *11-05-2012 (வெள்ளிக்கிழமை) அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*